

# மஸ்ஜிட் இந்தியா பகுதியில் சீரமைப்புப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன!

நமது நிருபர்

கோலாலம்பூர், செப்.11-
ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மண்சரிவு நிகழ்ந்த இடத்தில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வது உட்பட வர்த்தகர்களின் பிரதிநிதிக்குத் தகவல்களைக் கொடுப்பதில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த இணக்கம் மாநகர் மன்றம், சில அரசாங்க நிறுவனங்கள், ஜாலான் மஸ்ஜிட் இந்தியா சுற்றுப் பகுதி வர்த்தகப் பிரதிநிதி ஆகியோருடன் கடந்த 5ஆம் தேதி நடத்தப்பட்ட கூட்டத்தில் காணப்பட்டது.

இவ்விரு அமர்வுகளிலும் விஸ்மா யாக்கினிலிருந்து ஜாலான் மஸ்ஜிட் இந்தியா போலீஸ் சாவடி வரை 160 மீட்டர் நீளத்திற்குப் பாதை மூடப்படும் என்று மாநகர் மன்றம் தெரியப்படுத்தியது.

சாலையை மூடும் இந்நடவடிக்கை உண்மையில் பயன்பாட்டுச் சோதனை நடவடிக்கை நில கட்டமைப்புக்கு வழி விடும் வகையில் மேற்கொள்ளப்படுகிறது. அந்த வகையில் நிலத்தின் திட்டத்தையும் மாநகர் மன்றம் தாக்கல் செய்தது. அவற்றில் வேலி பொருத்தப்படுவதும் அடங்கும் என்று ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.